(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 251.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2018 ஏப்ரல் 04 புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

465/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (10)

(அ) (i) 2015 ஆம் ஆண்டினுள் சனாதிபதி அவர்கள் கலந்துகொண்ட வெளிநாட்டு பயணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திலும் கலந்துகொண்டவர்களின் பெயர், பதவி மற்றும் இந்நபர்களுக்காக அரச மற்றும் அரசுசார் நிறுவனங்களினால் ஏற்கப்பட்ட செலவுகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1231/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1424/ '16

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட முன்மொழிவு இலக்கம் 201 இன் மூலமாக புத்தளம், அம்பாந்தோட்டை மற்றும் கிளிநொச்சி போன்ற விசேடமாக இனங்காணப்பட்ட பிரதேசங்களில் பாரியளவில் சுற்றாடல் கூருணர்வுமிக்க கைத்தொழில்கள் தாபிக்கப்படுமென செய்யப்பட்டுள்ள முன்மொழிவுக்கிணங்க 2016 ஆம் ஆண்டில் அப்பிரதேசங்களில் புதிதாக தாபிக்கப்பட்ட கைத்தொழில்கள் யாவை;

(ii) சுற்றாடல் கூருணர்வுமிக்க கைத்தொழில்களை இனங்காண்பதற்காக பாவிக்கப்படுகின்ற குறிகாட்டிகள் யாவை;

(iii) இலங்கையில் ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களினுள்ளும் அதற்கு வெளியிலும் இடம்பெறச் செய்யப்பட்டுள்ள சுற்றாடல் கூருணர்வுமிக்க கைத்தொழில்கள் யாவை;

(iv) மேற்படி கைத்தொழில்கள் மூலமாக சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களைத் தடுப்பதற்காக அரசாங்கத்தினால் விதந்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1739/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்பதிவ யாத்திரைகளை ஏற்பாடு செய்ய அனுமதி பெற்றுள்ள நிறுவனங்கள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தம்பதிவ யாத்திரைகளின் போது மரணித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மரணித்துள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஆட்களை தம்பதிவவுக்கு அழைத்துச்சென்ற நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(vi) இவ்வாறு மரணித்தவர்களின் குடும்பங்களது நலன்புரிக்காக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

2007/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கலாசார நிதியத்திற்கும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் இடையிலான இணைப்புக்காக நிறுவனத்தில் தற்போதுள்ள பதவிகளுக்கு மேலதிகமாக வேறு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) அந்த நியமனங்கள் வழங்கப்படும் போது பின்பற்றிய முறையியல் யாதென்பதையும்;

(iv) அந்த நியமனங்களுக்காக கவனத்திற்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகமைகள் யாவை என்பதையும்;

(v) அவர்களது சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2116/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 27 கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய 114 கிராமங்களில் சுமார் 45 சிறு விவசாயக் குளங்கள் உள்ளனவென்பதையும்;

(ii) மேற்படி குளங்கள் பல வருடங்களாக புனரமைக்கப்படாத காரணத்தினால் சிறு போகத்தின் போது நெற் செய்கையாளர்களுக்கும் ஏனைய விவசாயிகளுக்கும் ஏற்புடைய காலப்பகுதியில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது போகின்றமையால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட குளங்களுக்கு முன்னுரிமை அளித்து, அவற்றை புனரமைப்பதற்கு அமைச்சிடம் ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இக்குளங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2138/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்கு உயிரியல் பாடத் துறையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து தோற்றியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில், பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iii) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iv) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவன் அல்லது மாணவியின் ஆகக்குறைந்த பெறுபேறு, Z பெறுமதி, கல்வி கற்ற பாடசாலை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவ பீடம் யாதென்பதையும்;

ஒவ்வொரு மாவட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 09.30 மணி முதல் பி.ப. 9.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 9.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க விடயம் மீதான நடவடிக்கைகள் இன்றைய தின அமர்வில், 7 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்தும் இன்றைய தினம் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 216/ ’18

கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ சமல் ராஜபக்ஷ
கௌரவ விமல் வீரவங்ச
கௌரவ உதய பிரபாத் கம்மன்பில
கௌரவ டலஸ் அழகப்பெரும
கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன
கௌரவ சாலிந்த திசாநாயக்க
கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க
கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே
கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா
கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே
கௌரவ செஹான் சேமசிங்க
கௌரவ ஜானக வக்கும்புர
கௌரவ கனக ஹேரத்
கௌரவ தாரக்க பாலசூரிய
கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்
கௌரவ விமலவீர திசாநாயக்க
கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன
கௌரவ எஸ். பிரேமரத்ன
கௌரவ டி.வீ. சானக
கௌரவ நாமல் ராஜபக்ஷ
கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ ரோஹித அபேகுணவர்தன
கௌரவ சிசிர ஜயகொடி
கௌரவ பியல் நிசாந்த த சில்வா
கௌரவ பிரேமலால் ஜயசேக்கர
கௌரவ விதுற விக்கிரமநாயக்க
கௌரவ சீ.பீ. ரத்நாயக்க
கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண
கௌரவ ஜயந்த சமரவீர
கௌரவ காமினி லொக்குகே
கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி
கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து
கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன
கௌரவ லொஹான் ரத்வத்தே
கௌரவ தேனுக விதானகமகே
கௌரவ திலும் அமுனுகம
கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல
கௌரவ கஞ்சன விஜேசேகர
கௌரவ துலீப் விஜேசேக்கர
கௌரவ விஜித பேருகொட
கௌரவ சனத் நிசாந்த பெரேரா
கௌரவ அருந்திக்க பர்னாந்து
கௌரவ குமார வெல்கம
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ ஜனக பண்டார தென்னகோன்
கௌரவ எஸ்.எம். சந்திரசேன
கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர
கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா
கௌரவ சந்திரசிறி கஜதீர
கௌரவ நிமல் லான்சா
கௌரவ கே. காதர் மஸ்தான்
கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ பிரசன்ன ரணவீர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மீது நம்பிக்கையின்மை,—

பிணைமுறி மோசடியை மேற்கொள்ளும் நோக்கத்துடன் வழமைக்கு மாற்றமாக இலங்கை மத்திய வங்கியை நிதி அமைச்சிலிருந்து நீக்கி தனக்குக் கீழ் கொண்டு வந்ததனாலும்;

இலங்கைப் பிரசை அல்லாதவரும், களங்கமான வரலாற்றைக் கொண்டவரும், அக்கறைகளுக்கிடையிலான முரண்பாடு உடையவருமான திரு. அர்ஜுன் மகேந்திரனை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு பெயர்நியமனம் செய்ததனாலும்;

அண்மைக் காலத்தில் உலகத்தில் நடந்த பாரிய நிதி மோசடியான இலங்கை மத்திய வங்கி பிணைமுறிகள் மோசடியுடன் மிகத் தெளிவாகவே சம்பந்தப்பட்டிருப்பதனாலும்;

மேற்படி மோசடியில் சம்பந்தப்பட்ட மோசடிக்காரர்களை காப்பாற்றுவதற்காக தன்னுடைய அரசியல் நண்பர்களை உள்ளடக்கிய பிட்டிபன குழுவை நியமித்து குறித்த மோசடிக்காரர்களைக் காப்பாற்ற முயற்சியெடுத்ததனாலும்;

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக மோசடிக்காரர்களை காப்பாற்றுகின்ற வகையிலும், உண்மையான விடயங்களை மூடிமறைத்தும் 2015 மார்ச் 17 ஆம் திகதி விசேட கூற்றொன்றை வெளியிட்டு பாராளுமன்றத்தை தவறான வழியில் இட்டுச்சென்றதனாலும்;

பிணைமுறி மோசடி தொடர்பாக பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் (கோப்) விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் அக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்திய ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரொருவரை மாற்றி புதிய உறுப்பினரொருவரை உள்வாங்கி மேற்படி குழுவின் ஊடாக குற்றவாளிகளை குற்றமற்றவர்களாக காட்டுவதற்கு முயற்சியை மேற்கொண்டதனாலும்;

பிணைமுறி மோசடி தொடர்பாக பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் (கோப்) விசாரிக்கப்பட்டு வந்த நிலையில் அது தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அக் குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களுக்கு அழுத்தங்களை பிரயோகித்ததனாலும்;

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்டுள்ளதாக அது தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப்பட்ட பிரதி மத்திய வங்கி ஆளுநர் திரு. பி. சமரசிறிக்கு நிதி அமைச்சில் ஆலோசகர் பதவியொன்றை வழங்குவதற்கு அமைச்சரவைக்கு சிபாரிசு செய்ததனாலும்;

மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் குற்றவாளிகளில் ஒருவரான திரு. அர்ஜுன் மகேந்திரனுக்கு பதிலாக வேறு ஒருவரை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமனம் செய்வதற்கு சனாதிபதி நடவடிக்கை எடுத்தபோது மீண்டும் இவரை மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கு பெரும் பிரயத்தனம் மேற்கொண்டதனாலும்;

பிணைமுறி மோசடியின் குற்றவாளிகளில் ஒருவராகியதனால் திரு. அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை இழந்த பின்னரும் இவருக்கு தமது அமைச்சில் ஆலோசகர் பதவியொன்றை வழங்கியதனாலும்;

திரு. அர்ஜுன் மகேந்திரன் இலங்கையிலிருந்து வெளியேறும் வரை இவர் வெளிநாடு செல்வதை தடுக்கும் நீதிமன்றக் கட்டளையொன்று பெற்றுக்கொள்ளப்படுவதைத் தவிர்த்ததன் மூலம் இவர் வெளிநாடு சென்று நீதிமன்றத்திற்கு தலைமறைவாயிருப்பதற்கு வாய்ப்பேற்படுத்திக்கொடுத்ததனாலும்;

நிதி அமைச்சரால் மாத்திரம் தத்துவங்களை அமுல்படுத்தக் கூடியதான,

i. 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நிதிசார் நீதிச்சட்டம்.

ii. 1953 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்.

iii. 1923 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம்.

iv. 1937 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம்.

v. 1944 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நிதிசார் ஒதுக்கு நிதியங்கள் கட்டளைச் சட்டம்.

vi. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்.

vii. 1979 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க எதிர்பாராச் செலவு நிதியச் சட்டம்.

viii. 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம்.

ix. 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்

ஆகிய சட்டங்களைப் பற்றி அறிந்திருந்த நிலையில், இலங்கை மத்திய வங்கியை தமக்குக் கீழ் கொண்டுவந்து மேற்படி சட்டங்களின் கீழான தத்துவங்களை பிரயோகித்ததன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதிக் கட்டுப்பாடு தொடர்பில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததான சட்டங்களை மீறியமையினாலும்;

பொருளாதார அலுவல்கள் அமைச்சையும் பொருளாதார முகாமைத்துவ குழுவின் ஊடாக நிதி அமைச்சையும் மத்திய வங்கியையும் தமக்கு கீழ் கொண்டுவந்து கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியினுள் தேசிய பொருளாதாரத்தை வழிநடத்தியதன் விளைவாக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டமையின் மூலமும், பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்ததன் மூலமும், பணவீக்கம் கட்டுப்படுத்த முடியாத வகையில் உயர்வடைந்ததன் மூலமும், வட்டி வீதம் வேகமாக அதிகரித்ததன் மூலமும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளை மீளப்பெற்று இலங்கையிலிருந்து வெளியேறியதன் மூலமும் பாரிய பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்து பொதுமக்களை பாதிப்புக்கு உள்ளாக்கியதனாலும்;

சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சுப் பதவியை வகித்த நிலையில் கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட பதற்றநிலையின் போது சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியமையினால், உயிரிழப்புக்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதன் மூலம் தேசிய ஒற்றுமை வெகுவாக பாதிக்கப்பட்டு சர்வதேச சமூகத்தில் இலங்கையின் பிரதிமைக்கு களங்கம் ஏற்படுத்தியதனாலும்;

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு தொடர்ந்தும் பிரதம அமைச்சராவும் அமைச்சரவை அமைச்சரொருவராகவும் செயலாற்றுவதற்கான இயலுமை குறித்தும் மேலும் அவர் பிரதம அமைச்சராக பதவி வகிக்கும் அரசாங்கத்தினால் செயலாற்றுவதற்கான இயலுமை குறித்தும் நம்பிக்கையின்மை காணப்படுவதாக இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* 2.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 8, 14 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகன (கட்டண) ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 143 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகன (கடுகதிப் பாதை) ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 215 அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் உடனடியான குற்றப்பணத்தொகை ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 7.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூன் 16 ஆம் திகதிய 1867/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைத் திருத்தி 2017 திசெம்பர் 29 ஆம் திகதிய 2051/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மார்ச் 16 ஆம் திகதிய 2062/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 2049/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மாகாண சபைகளின் தேர்தல் தொகுதி எல்லைகளை நிர்ணயிப்பதற்கான குழுவின் அறிக்கை,— 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3அ. (11) ஆம் பிரிவின் பிரகாரம் எல்லை நிர்ணயக் குழுவினால் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான அக்குழுவின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 15.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

20.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.